www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

FR-NKL நாமக்கல் மாவட்டம்

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

பதிவு எண்.

**10 - ஆம் வகுப்பு** **சமூக அறிவியல்**

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

பகுதி: அ

14x1 = 14

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மாசேதுங்

2. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
அ) நாகசாகி ஆ) ஹிரோஷிமா இ) இன்னோசிமா ஈ) கவாசாகி

3. சரியான கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்
i) இராமகிருஷ்ணா மிஷன் கல்வி, உடல்நலம் & பேரிடர்களின்போது நிவாரணப் பணி செய்தல் போன்ற சமூகப்பணிகளில் செயலூக்கத்துடன் ஈடுபட்டது
ii) பேரின்ப நிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்ம ரீதியாக இறைவனோடு இணைவதை இராமகிருஷ்ணர் வலியுறுத்தினார்
iii) இராமகிருஷ்ணர் இராமகிருஷ்ணாமிஷனை ஏற்படுத்தினார்
iv) இராமகிருஷ்ணர் வங்கப் பிரிவினையை எதிர்த்தார்.
அ (i) சரி ஆ(i) மற்றும் (ii) சரி இ) (iii) சரி ஈ) (i), (iii) மற்றும் (iv) சரி

4. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
அ) கோவில் நுழைவு நாள் ஆ) மீட்பு நாள் இ) நேரடி நடவடிக்கை நாள் ஈ) சுதந்திரப் பெருநாள்

5. கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?
அ) டால்ஸ்டாய் ஆ) ஜான் ரஸ்கின் இ) தாரோ ஈ) காந்தியடிகள்

6. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் எது?
அ) ஊட்டி ஆ) ஆனை முடி இ) கொடைக்கானல் ஈ) ஜின்டா கடா

7. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்
கூற்று: இமய மலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது
காரணம் : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியத் துணைக் கண்டத்தை மித வெப்பமாக வைத்திருக்கிறது
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் தவறு
இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி

8. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
அ) சேலம் ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்

9. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் எது?
அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்

10. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி

11. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
அ) ஒரு முறை ஆ) இரு முறை இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை

12. இன ஒதுக்கல் கொள்கை என்பது
அ) ஒரு சர்வதேச சங்கம் ஆ) இராஜதந்திரம் இ) ஒரு இனப்பாகுபாட்டுக்கொள்கை
ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை

13. காட் (GATT) இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்
அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனிவா

14. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது
அ) மதுரை ஆ) சென்னை இ) கோயம்புத்தூர் ஈ) தூத்துக்குடி

பகுதி - ஆ

II. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி.வினா எண். 28க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 10x2 = 20

15. பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

16 டாலர் ஏகாதிபத்தியம் - விளக்குக.

17 கிழக்கு மற்றும் மேற்கில் அமையப் பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

18 லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.

19. காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக

20. இந்தியாவில் காணப்படும் மண்வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

21. தகவல் தொடர்பு என்றால் என்ன?

22 தேரி - என்றால் என்ன?

23 தமிழ்நாட்டின் வேளாண் பருவக் காலங்களை எழுதுக

24 நிதி மசோதா - குறிப்பு வரைக.

25 சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.

26 தனி நபர் வருமானம் என்றால் என்ன?

27 தொழில் முனைவோர் என்பவர் யார்?

28 பனிப்போர் என்பது பற்றி குறிப்பு எழுதுக.

பகுதி - இ

III. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.வினா எண். 42 கட்டாயமாக விடையளிக்கவும். 10x5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக

அ) 1919ம் ஆண்டின் இந்திய அரசு சட்டம் மாகாணங்களில்............அறிமுகம் செய்தது.

ஆ) அமைதியையும், பாதுகாப்பையும் விரும்பிய அரபு நாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம்......... ஆகும்

இ) உலகிலேயே அதிக மழை பெறும் பகுதி............ ஆகும்

ஈ) இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலன் ................ ஆகும்

உ) உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம்...........ஆம் ஆண்டு அமலுக்கு வந்தது

30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை பட்டியலிடுக

31. 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக எழுதவும்

32. வேறுபடுத்துக

அ) 1. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்

2. புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்

ஆ) காரணம் கூறுக: வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு

33. தென் மேற்கு பருவக்காற்று குறித்து எழுது.

34. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?

35. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின் பரவல் பற்றி விளக்குக.

36. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

37. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

38. பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்கள் எழுதுக.

39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

40. GST யின் அமைப்பை எழுதுக.

41. 1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகளுக்கு உட்பட்ட ஏதேனும் ஐந்து வரலாற்று நிகழ்வுகளை கொண்டு காலக்கோடு வரைக.

42. உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.

அ) பிரிட்டன் ஆ) ஜெர்மனி இ) சான் பிரான்சிஸ்கோ ஈ) ஹிரோஷிமா உ) பிரேசில்

பகுதி - ஈ

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 8x2 = 16

43. பன்னாட்டுச் சங்கத்தின் குறிக்கோள்கள் யாவை?

பன்னாட்டு சங்கத்தின் செயல்பாடுகள் யாவை? **(அல்லது)**

காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்பதை ஆராயவும்

44 கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.

1. கொங்கண கடற்கரை 2. சோட்டா நாக்பூர் பீடபூமி 3. சுந்தரவனம் 4. தேசிய பூங்கா ஒன்று 5.வண்டல் மண் பரவியுள்ள பகுதிகள் 6. இந்தியாவின் மின்னியல் தலைநகரம் 7. இலட்சத் தீவுகள் 8. ஒரு சர்வதேச விமான நிலையம் **(அல்லது)**

கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.

1. நீலகிரி 2. காவிரி டெல்டா 3. வைகை ஆறு 4. களக்காடு வனவிலங்கு 5, மன்னார் வளைகுடா 6.செம்மண் பரவியுள்ள பகுதிகள் 7. வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகள் 8.கோயம்புத்தூர் பீடபூமி

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com